1993 மார்ச் 18]

124—

இராமநாதபுரத்திலுள்ள அரசுக் கல்லூரி.

*10097—திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரத்திலுள்ள அரசுக் கலைக் கல்லூரி கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகக் குறைவான நாட்கள் இயங்கியதற்கு காரணம் என்ன ?

(ஆ) இக்கல்லூரி திறம்பட செயல்பட முன்னேற்ற நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம், சேதுபதி அரசினர் கலைக் கல்லூரியில் கடந்த 5 ஆண்டுகளில் கிராமப்புற ஆதி திராவிடர் மாணவர்களுக்கும் நகர பிற்பட்டோர் மாணவர்களுக்கும் இடையில் ஏற்படும் தகராறுகள், தண்ணீர்ப் பிரச்சினை, போக்குவரத்து வசதியின்மை முதுநிலை பட்ட வகுப்புகள் துவக்க வேண்டி கோரிக்கை மற்றும் பல காரணங்களினால் கல்லூரி குறைவான நாட்கள் இயங்கியது.

(ஆ) ஆம்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசுக் கலைக் கல்லூரிகள் இரண்டே இரண்டுதான் இருக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகராக இருக்கின்ற இராமநாதபுரத்தில் உள்ள அந்தக் கலைக் கல்லூரி, அடிக்கடி ஏதாவது ஒரு காரணத்தினால் அநேக நாட்கள் மூடித்தான் இருக்கிறது. இங்கு நிரந்தரமாக ''ஆக்டிங் பிரின்சிபால்'' தான் செயல்பட்டு வருகிறார். கல்லூரி வளாகத்திற்குள் விடுதிக் கட்டிடம் வேண்டும்; தண்ணீர் வசதி வேண்டுமென்று பல்வேறு நாட்களில் மாணவர்கள் ஸ்டிரைக் செய்தும், அது மூடியே கிடக்கிறது. ஆகவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியில் சமயப் பிரச்சினைகள் அடிக்கடி இருக்கிற சூழ்நிலையில், அந்த சமயப் பிரச்சினைகள் கல்லூரிக்கும் பரவி வருகிற காரணத்தினால், நிரந்தர தீர்வு காணும் பொருட்டு, ஏதேனும் திட்டமிட்டு, அதை ஒழுங்காக நடத்த அரசு முன் வருமா என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் கலைக் கல்லூரிக்கு கல்லூரித் தலைவராக ஒருவரை மாற்றினாலோ அல்லது ஆசிரியர்களை மாற்றினாலோ பெரும்பாலும் அவர்கள் அங்கே போய் வேலை செய்ய விரும்புவதில்லை. லீவ் எடுத்துக் கொண்டு, அங்கே போகாமல் இருக்கவே முயற்சி செய்கிறார்கள். அது ஒரு முக்கியமான காரணமாக இந்தப் பிரச்சினைகளுக்கு இருந்து வருகிறது. இருந்தாலும், கல்லூரி நல்ல முறையிலே செயல்பட சில நடவடிக்கைகளை அரசு எடுத்து வந்திருக்கிறது.

கடந்த 5 ஆண்டுகளாக கல்லூரிக் கட்டிடம் மற்றும் வளாகத்தில் வன்முறைக் கலவரங்கள் ஓய்ந்து விட்டன. பிற்பட்டோர் மற்றும் ஆதி திராவிட மாணவர்களுக்கிடையே கசப்புணர்வு அகற்றப்பட்டு கல்லூரி நன்முறையில் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(2) கடந்த 3 ஆண்டுகளாக, கல்லூரியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. இதனால் இருக்கை பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதைத் தவிர்க்க ''ஷிப்ட் சிஸ்டம்'' இயங்கி வருகிறது. ஆகவே, அங்கே கணிசமான அளவிலே ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

(3) கல்லூரி நிறுத்தத்தில் அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்ல ஆணையிடப்பட்டு, அனைத்து பஸ் மற்றும் பேஸஞ்சர் ரெயில்கள் நின்று செல்கின்றன.

(4) தற்போது மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காணப்படுகிறது. சென்ற ஆண்டு மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளனர்.

(5) இக்கல்லூரியைப் பழுது பார்ப்பதற்கு, சுமார் 2 இலட்சம் ரூபாய் விருதுநகர் வட்ட பொதுப்பணித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(6) எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நூல்கள் மற்றும் உபகரணங்கள் ஆய்வக விரிவாக்கத் திட்டம், ஆசிரியர் மேம்பாட்டுக்கு ரூ. 10 லட்சம், பல்கலைக்கழக மானியக் குழு நிதியுதவி பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட நடவடிக்கைகளினால் அங்கே இருக்கிற நிலைமையிலே கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 125, திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம், இருக்கையில் இல்லை.